# தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

தொகுதி – 1



## இந்து சமய மன்றம்

நெ.1, சாலைத்தெரு, காஞ்சிபுரம்

ஆலயபாய

# தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

தொகுதி - 1

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு **ஸ்ரீ சங்கராச்சார்ய ஜெயேந்த்ர சரஸ்வதி**
ஸ்வாமிகளின் 86வது ஜெயந்தி விழாவில்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு **ஸ்ரீ சங்கராச்சார்ய**
**ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி** ஸ்வாமிகளின்
அருளாணைப்படி தொகுக்கப்பட்டு, அவர்களின்
அருளாதரவில் வெளியிடப் பெற்றது.

வெளியீடு:

**இந்து சமய மன்றம்**

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் சமய மற்றும்
சமுதாய சேவை நிறுவனம்
நெ.1, சாலைத்தெரு, காஞ்சிபுரம்.

# தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

தொகுதி - 1


பதிப்பாசிரியர்கள்

மருத்துவர் வெ.பா. ரிசிகேசன்

முனைவர் கலை.இராம. வெங்கடேசன்

முனைவர் ஜெ. இராதாகிருஷ்ணன்



| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட் 5, 2020 |
| அளவு | : | டெம்பி 1/8 |
| பக்கங்கள் | : | 640 |
| விலை | : | ரூ.500 |
| அட்டை & நூல் வடிவமைப்பு | : | எஸ். காயத்ரி |
| அச்சாக்கம் | : | டுடே கிராபிக்ஸ், சென்னை. |
| வெளியீடு | : | இந்து சமய மன்றம் நெ.1, சாலைத்தெரு, காஞ்சிபுரம். |
| முன்அட்டை படம் | : | சிதம்பரம் |

Sankara Publications

**சங்கர பதிப்பகம்**

ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் & கல்லூரி

(தன்னாட்சி), ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561.

தொலைபேசி : 044 - 27264066

2020

# திருச்செங்கோட்டுத் தலபுராணம்

முனைவர் **ஆ. மகாலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

ஒருவன் தான் பிறந்து வளர்ந்த தாய்நாட்டை தன் தாயோடு ஒப்ப உயர்த்தி பெருமைப்பட கூறுவது நாட்டுப்பற்றாகும். அவ்வகையில்

**பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானிலும் நனி சிறந்தனவே**

என பாரதியாரால் பெருமைப்பட கூறுவது தாய்நாட்டுப் பற்றுக்குச் சான்றாகும். ஒரு நாட்டின் பழம்பெருமை அந்நாட்டு மக்களின் நாகரீகம் நல்வாழ்வு, கல்வி அறிவு, இலக்கிய மேம்பாடு, அரசியல், இயற்கை வளம் முதலியனவாகும.; உலக நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு வரலாறு உண்டு. நாட்டி லுள்ள ஒவ்வொருவரும் தம் தாய்நாட்டின் வரலாற்றினையும் அங்கு உறையும் தெய்வத் தலங்களையும் அறிந்து கொள்ளுதல் தம்

கடமைகளில் ஒன்றாகும். அவ்வகையில் கொங்கு நாட்டின் வரலாற்றை குறிப்பிடும்போது கொங்கு என்பது தேன், மணம், வீணான நிலம் என்ற மூன்றையும் உள்ளடக்கியப்பகுதி கொங்குநாடு என்கிறார் புலவர் குழந்தை. கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் கொங்காணம் என்று பேசப்படுகின்றது. இதனைக் கொங்கு மண்டலம் என்று கூறும் வழக்கமும் உண்டு. தமிழ்நாட்டின் ஏனைய உட்பிரிவுகள் அனைத்தும் கடற்கரை கொண்டு விளங்கக் கொங்குநாடு மட்டும் கடற்கரை இல்லாத உள்நாடாக அமைந்துவிட்டது. மேலும் இங்கு மழை வளமும் மிகக் குறைவு என்பதைக் கொங்கு மலிந்தால் எங்கும் மலியும் என்ற தொடர் காட்டுகிறது. இதற்கு இந்நாட்டின் பெயர் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இவ்வாறாக கொங்குநாட்டில் அமைந்துள்ள பாடல்பெற்ற தலங்களாக கொங்கேழ் தலங்கள் திகழ்கின்றன. இதைக் குறித்தான வெண்பாவில்

**ஆதிகருவூர் அதிவெஞ்சமாங்கூடல் நீதன்**
**கொடுமுடி மேல்நீர்நணா - மேதினியில்**
**நாதன் அவினாசி நன் முருகன்பூண்டி**
**திருச்கோடு டெனவே சொல்.** (பழம்பாடல்)

என்னும் பாடலில் கருவூர், வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, பவானி, அவினாசி, திருமுருகன்பூண்டி, திருச்செங்கோடு என்ற முறையிலேயே தலங்கள் பற்றிய செய்திகள் அமைகின்றன. இவ்வேழுதலங்களுள் திருச்செங்கோட்டுதலச்செய்திகளை விளக்குவதாக இவ்வாய்வு அமையவுள்ளது.

## திருச்செங்கோட்டு

திருப்பரங்குன்றம் போல் சிவனாரின் சிறந்த தளமாகவும் செங்கோட்டுவேலவர் என வழங்கும் அவரது மகனாரின் குன்றுதோறாடல்களில் ஒன்றாகவும் திருச்செங்கோடுமலை கருதப்படுகிறது. கொங்குநாட்டு சிவதலங்கள் ஏழினுள் மலை கோயிலாக அமைந்துள்ளது இத்திருத்தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம், என்ற மூன்றாலும் சிறப்பு பெற்ற தலமாகும். நல்லதொரு வரலாறும் புராணங்களும் கொண்டதாய் உள்ளது. அம்மையும் அப்பரும் கலந்த அம்மையப்பத் திருவுருவாய் எழுந்தருளி நிற்கும் சிறப்பு வேறு தலத்திற்கு இல்லாத சிறப்பாகும்.

குருக்கோடு நவமணியும் நவநிதியும் நவரசமும் கொழிக்குங்கோடு
தருக்கோடு சுருபியம் சிந்தாமணியும் தழைத்த தெய்வத்தான மாமால்
இருக்கோடு பலகலைகளாகமங்கள் குரவோர்க ளிரைக்குங்கோடு
செருக்கோடு முமையரனைப் பிரியாம லினிதிருக்கும்
திருச்செங்கோடே.

- (திருப்பணி மாலைப்பாடல்)

## ஊர் அமைவிடம்

இவ்வூர் நாமக்கல் மாவட்டத்தில் ஒரு வட்டமாக ஈரோட்டில் இருந்து 20 கிலோ மீட்டர் கிழக்கே உள்ளது. வடக்கே சங்ககிரியும் மேற்கே ஈரோடும் தெற்கு பரமத்தி வேலூரும் கிழக்கே நாமக்கல்லும் இவ்வூரின் எல்லைகளாக உள்ளன. சங்ககிரி வரையிலும் ரயில் போக்குவரத்தும் உண்டு.

## வரலாற்றுச் சான்றுகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவிக்கப்பட்ட கருதப்படும் இக்கோயிலில் இராஜராஜன், ராஜேந்திர சோழன், பாண்டிய சடையவர்மன், கொங்கு நாட்டை ஆண்ட வீரராஜேந்திரன், விஜயநகர மற்றும் கர்நாடக மன்னர்கள், மோகூர் காயங்கள் மற்றும் பல குறுநில மன்னர்கள் செய்வித்த கல்வெட்டுக்கள் உள்ளன. அவர்களால் செய்விக்கப்பட்ட திருப்பணி மற்றும் அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

## திருச்செங்கோடு பெயர்க்காரணம்

திருச்செங்கோடு மலை மற்ற மலைகளை விட தனிச்சிறப்பு உண்டு. ஒருசமயம் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் தங்களில் யார் பெரியவர் என்று கடும் போர் நடந்தது. இருவரும் தம் வலிமையை நிருபிக்க தம்முள் போட்டியை நடத்தினர். அப்பொழுது மேருமலையை ஆதிசேடன் பற்றிக்கொள்ள வாயு பகவான் அதை தகர்க்க வேண்டும். அதன்படி ஆதிசேடன் ஆயிரம் பணாமுடியைக் கொண்டு மேருவின் முடியை அழுத்திக் கொண்டார். வாயுதேவன் தன் வலிமையெல்லாம் ஒருமுனைப்படுத்தி தன் வளியோட்டத்தை வீசிச்சாடினான். உலகத்தி உள்ள உயிர்களால் இப்பெருங்காற்றை தாங்கிக்கொள்ள முடியவில்லை அனைத்து உயிரினங்களும் தட்டுத்தடுமாறி மயங்கி நின்ற

இதைப்பார்த்த தேவர்களும் முனிவர்களும் ஆதிசேடனிடம் கருணை காட்ட வேண்டினர். இதனால் ஆதிசேடன் தம் பிடியைத்தளத்தினார். இதுதான் சமயம் என்று வாயுதேவன் ஓசையோடு அடித்த வேகத்தினால் மேருமலையின் சிகரத்துடன் ஆதிசேடனின் ஒருதலையையும் இரண்டு துண்டுகளும் இம்மலையின் மீது விழ இரத்தம் மலைமேல் அபிடேகமாக விழுந்தது. எனவே மலையே செந்நிறமாக மாறியது. அதனால் செங்கோடு என்ற பெயர் ஏற்பட்டது. இம்மலையின் தோற்றம் உச்சிப்பிள்ளையார் கோயில் நாகத்தின் தலைப்பகுதி என்று வைத்துக் கொண்டால் வரவர மலையின் குறுகி பாம்பின் தோற்றத்தில் நீண்டு வால் பகுதி போல் உள்ளதால் நாகமலை என்றும் கூறுவர்.

இம்மலையில் நாகர் பள்ளம் என்ற இடத்தில் பாறையின் மீது ஐந்துதலை நாகம் ஒன்று படமெடுத்து ஆடுவது போல் 60 அடி நீளத்தில் படையாக காணப்படுகிறது. இப்பகுதி விழுந்த ஆதிசேடனை நினைவுறுத்தும் வகையில் அமைந்திருப்பதால் நாகதோசம் உள்ளவர்கள் இங்கு வந்து பரிகாரம் செய்தால் தோசம் நீங்கும் என்றும் நாககிரி, நந்திமலை, இரத்தகிரி, கோதைமலை, சேடமலை என்ற பெயரும் துர்க்கை பெரிதாக காணப்படுவதால் துர்க்கை மலை என்றும் இந்த ஊரின் கண் மாடமாளிகைகள் கொடி ஆடுவதால் கொடிமாடச் செங்குன்றூர் என்றும் பெயரும் பெற்றதாகக் கூறுவர்.

## மலையின் அமைப்பும் சிறப்பும்

திருச்செங்கோடு மலை கடல் மட்டத்திலிருந்து 900 அடி உயரத்தில் உள்ளது. பூமியிலிருந்து மலையுச்சி வரை ஆயிரத்து இருநூற்று படிக்கட்டுகள் உள்ளன. ஒரு புறமிருந்து பார்த்தாள் இம்மலை இலிங்க வடிவமாகவும் ஒருபுறம் நாகப்பாம்பு வடிவமாகவும் ஒருபுறம் அர்த்தநாரீஸ்வரர் வடிவமாகவும் மறுபுறம் வேலவராகவும் காட்சியளிப்பது மழையின் அமைப்பாக உள்ளது. இந்த மலையின் படியில் இருக்கும் இயற்கை எழிலை ஏழு கிலோமீட்டர் கிரிவலம் வந்தால் நல்ல மூலிகை காற்றை சுவாசிக்க முடிகின்றது. மலைமீது செல்ல போக்குவரத்து வசதிகள் மலைமீது செல்ல கூடிய அளவிற்கு செம்மையாக அமைக்கப்பட்டுள்ளது. இது நான்கு கிலோமீட்டர் நீளமுடையது. திருக்கோயில் பேருந்துகள் பலமுறை இயக்கப்பட்டு மலைமேல் சென்று வருகின்றன.

## படிக்கட்டுகளின் அமைப்பும் சிறப்பும்

இம்மலையின் மீது படிக்கட்டுகளில் ஏறும் பொழுது இயற்கை காட்சிகளை கண்டு மகிழலாம். அங்கே இளைப்பாறும் மண்டபமும் ஒற்றுமையை வளர்ப்பது போல் அமைந்துள்ளது. மலைக் கோயிலில் திருப்பணி செய்துள்ள பல இனத்தவரும் படிக்கட்டுகளையும் மண்டபங்களையும் கட்டியுள்ளது தெரியவருகின்றது. முதற்படியில் விநாயகர் காட்சியளிக்கின்றார். தென்புறத்தில் முருகனுக்கு ஒரு ஆலயம் உண்டு. இக்கோயிலின் முன்புறத்தில் நல்ல தண்ணீர்க் கிணறு உண்டு. முதற்படியை கடந்து சென்றால் செங்குந்தர் மண்டபமும் சுவாமிகள் மடமும் அதனை தொடர்ந்து திருமுடி மண்டபமும்; உள்ளன. கீழ்ப்புறம் வீரபத்திர சுவாமி கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. அடுத்து நந்தி கோயில் அமைந்துள்ளது. இதில் இருந்து கீழே இறங்கினால் பெரியமலை நாகமலை என்றும் சிறியமலை நந்தி மலைக்கும் இடைப்பட்ட பள்ளத்தை நாகர்பள்ளம் என்கிறார்கள். இப்படி படிகட்டைக் கடந்து சென்றால் 60 சத்திய விளக்குகள் உள்ளன. இதைக்கடந்து சென்றால் வீற்றிருக்கும் முருகனையும் மேலப்பாளையத்தை சேர்ந்த காட்டு வேடுவர் எழுப்பியுள்ளனா.; அடுத்து பாண்டவர்குகை என்று அழைக்கப்படும் மிகப் பெரிய பாறை மண்டபமும் உண்டு. அதனையடுத்து நாடார் மண்டபம், செட்டி கவுண்டர் மண்டபம், தேவர் உடையார் மண்டபம், இளைப்பாற்றி மண்டபம், கோபுரவாயில் மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன.

## கோயில் அமைப்பு

இங்குள்ள இறைவன் அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் இராஜ கோபுரத்தை தாண்டி உள்ளே சென்றால் முன்மண்டபம் உள்ளது. இதை தாண்டி உள்ளே சென்றால் திருச்செங்கோடுவேலவர் கோயில் உள்ளது. முருகனுடைய கோயில் முன் மண்டபத்தில் கந்தபுராணப் பாடல்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்கு தென்மேற்கு நோக்கி அர்த்தநாரீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் முன்பு கொடிமரம் உள்ளது. அர்த்தனாரீஸ்வரர் திருஉருவம் வெண் பாசானத்தால் சித்தர்களால்; வடிவமைக்கப்பட்டுள்ளது. செங்கோட்டு வேலவன் இதேபோல் மூலிகையால் செய்யப்பட்ட அற்புதத்

திருமேனி ஆகும். அர்த்தநாரீஸ்வரர் பாதத்தின் கீழ் தேவ தீர்த்தம் ஊற்றாக அமைந்துள்ளது. கோயிலுக்கு தென்புறத்தில் நாரிகணபதி கிழக்கு நோக்கி அமைந்து இருக்கிறார். இத்திருக்கோயிலின் தென்புறத்தில் திருமகளும் நிலமகளும் உடனுறை ஆதிகேசவபெருமாள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளார். ஆமை மண்டபம் இம்மண்டபம் மேற்பகுதி மரத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் இறைவனை விழாக்காலங்களில் எழுந்தருளச் செய்து வழிபாடு நடத்துவது மரபாக உள்ளது.

இத்திருக்கோயிலுக்கு கீழ்த்திசையில் புகை மண்டபமும் மற்றுமொரு மேற்குப் பகுதியில் மூன்று மண்டபங்களும் உள்ளன. கோயிலின் கீழ் திசையில் பாண்டீஸ்வரர் கோயில் உள்ளது. உச்சிப்பிள்ளையார் கோயில் வழி என்ற மலடிகல் சிகரம் என்பவை திருக்கோயிலில் அமைந்துள்ளன. குழந்தைப்பேறு இல்லாதவர்கள்; இப்பாறையைச் சுற்றினால் மகப்பேறு பெறுவர் என்பது சொல்லப்படுகின்றது.

## திருச்செங்கோடுத் தலபுராணம்

நூலாசிரியர் தென்காசிகவிராச பண்டிதர். இத்தலபுராணம் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பருவதகாண்டம், மந்திரகாண்டம், தீர்த்த காண்டம் என்பவை பெரும் பிரிவுகளாக உள்ளன. புராணத்தின் 45 சருக்கங்கள் ஆக உட்பிரிவுகள் உள்ளன. பாடல்கள் 1226 ஆகும். இக்கோயிலில் அர்த்தநாரீஸ்வரரை திருஞானசம்பந்தர், அருணகிரியார், கொங்குமண்டல சதகம், சிலப்பதிகாரம், சங்கஇலக்கியத்தில் சில குறிப்புகள் என இருப்பது சிறப்புக்குரியது. இக்கோயிலின் தலபுராணத்தில் பல கதைகள் நிறைந்ததாக காணப்படுகின்றன.

## திருத்தலம் தொடர்பாகத் தொன்மக்கதைகள்

தாருகாவனத்தில் விளையாட்டாக உமையம்மை செய்த செயல் உலகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. முருகன் மேரு மலையை விட்டு பிரிந்து சென்றதால் பார்வதி மனக்கவலையில் இருந்தாள். இதனை அறிந்த சிவன் உமையம்மையை மகிழ்வூட்ட வனப்பகுதிக்கு அழைத்துச்சென்றார். அங்கு விளையாட்டாக சிவனின்

உலக இயக்கங்கள் தடைபெற்றன. இதனால் முனிவர்களின் நித்திய வழிபாடுகளில் காலம் மாறியதால் முனிவர்கள் சிவனிடம் முறையிட்டனர். இதற்கு காரணம் பார்வதி தான் செய்த தவறே இதற்கு காரணம் என்று கூறி செய்த பாவத்தை போக்கவும் தனக்கு இடம் கொடுக்க வேண்டியும் சிவனிடம் வேண்டினாள். உமையின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிவன் இமயமலையில் உள்ள கேதாரத்தை அடைந்து அங்கு தவம் செய்து காசி நகரில் விஸ்வநாதரை வணங்கி பின்பு காஞ்சி நகரை அடைந்து ஆற்றில் தவம் செய்தால் யாம் காட்சி கொடுப்போம் என்று கூறினார். அவ்வாறே செய்து, கம்பை ஆற்றில் மாமர நிழலில் பஞ்சாக்கினி வளர்த்து கடுந்தவம் செய்தாள். அப்பொழுது உமையை காண திருமால் வந்தார். அவரிடம் பலகாலமாக தவம் செய்கின்றேன்! ஆனால் சிவன் காட்சி தரவில்லை என்று கூறினர். அதற்கு திருமால் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து வழிபடுக! என்று கூறினார். உமையும் ஆற்று மணலில் சிவனை உண்டாக்கி நமச்சிவாய என்ற பஞ்சாக்கினி மந்திரத்தை உச்சரித்து தவம் இயற்றினாள். இதனை

**தாரகப் பிரமந்தனைத் தவறாதவன் பொடு மெம்பிரான்**
**நாரருட் சிவமந்திரத்தையே நாளுமொகக்க விளம்புவாய்**

(திருச்செங்கோடு தலபுராணம் பாடல் எண் 12)

எனவரும் வரிகளால் உணரலாம்.

## காஞ்சி காமாட்சி

இவ்வாறு தவம் செய்து வரும் பொழுது அவளுடைய மன உறுதியை சோதிக்கும் விதமாக கம்மையாற்றில் வெள்ளம் வரச்செய்தார்;. பெருக்கெடுத்த வெள்ளத்தைப் பார்த்த பார்வதி ஓடி வந்து சிவலிங்கத்தை காப்பாற்ற தனது மார்போடு தழுவிக் கொண்ட நிகழ்வை கண்ட சிவன் காட்சி கொடுத்து தன்னை காப்பாற்றியதால் காமாட்சி என்று இன்று முதல் திகழ்வாய்! என்று கூறி அருளினார். உமையும் பலவாறு புகழ்ந்து போற்றினார்.

இன்று முதல் நீ அன்று என் கண்ணை மறைத்த பாவம் நீங்கியது நீ விரும்பியபடி எனது உடலில் இடம்பெற விரும்பினா

திருவண்ணாமலைக்குச் சென்று அங்கு கௌதமர் தவப் பள்ளியில் கேதார கௌரி விரதம் இருப்பாய் என்று கூறி அருளினார். உமையும் தன் உருவாக்கிய சிவலிங்கத்திற்கு ஏகாம்பரநாதர் என்று வழிபட்டு பின் திருவண்ணாமலை சென்று நோன்பைத் தொடங்கினார். அப்பொழுது இறைவன் தோன்றி கொங்கு மண்டலத்தில் நாககிரி என்ற மலை உள்ளது. அங்கு உன் மகன் முருகன் உள்ளான.; எனவே அங்கு சென்று தீர்த்தமாடி தவம் செய்வாய் என்று கூறி பணித்தார்.

## இடபாகம் அருளல்

உமையும் நாககிரி மலைக்குச் சென்று தன் மூத்த மகன் கணபதி ஏற்படுத்திய தீர்த்தத்தில் நீராடி இளைய மகனை தழுவிக்கொண்டு வழிபாடு செய்து வந்தாள். தீர்த்தத்தில் நின்று பஞ்சாட்சர மந்திரத்தை நினைத்து பலகாலம் தவம் இயற்றினார். இறைவன் மனம் மகிழ்ந்து உனக்கு வேண்டும் வரம் யாது? என வினவ உண்மையும் யான் முன்பு வேண்டியபடி தங்களது திருமேனியில் சமபாகம் வேண்டும் என வேண்டினாள். இறைவனும் தனது இடப்பாகத்தை கொடுத்து அருளினார். திருமாலும் பிரம்மாவும் வந்து வணங்கி அர்த்தநாரீஸ்வரர் என்று திருநாமம் சூட்டி வழிபட்டு சென்றனர.; இதனை,

**கனகமேருவளைத் தகைக்காரணர் மனமகிழ்ந்து**
**தம் வாமம் வழங்கினார்**

திருச்செங்கோடு தலபுராணம் உணர்த்துகின்றது. இந்த அர்த்தபாகரை வழிபட்டால் கொடிய பாவங்கள் விலகிவிடும். காரியங்கள் கைகூடும் என்று தலபுராணம் உணர்த்துகின்றது.

## சிவனும் சக்தியும் ஒன்றே

ஒருசமயம் திருக்கயிலாய மலையில் ஐந்தொழில்களையும் இயற்றிய முழுமுதற் கடவுளான சிவபெருமானும்; உமாதேவியுடன் வீற்றிருக்க பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தத்தம் குறைகளை கூறிவிட்டு தேவர்களும் முனிவர்களும் சிவகணங்களும் அம்மையும் அப்பனையும் வணங்கி வருகையில் பிருங்கி முனிவர் மட்டும் அவ்வாறு செய்யாமல் சிந்திக்கலானார். பசு என்னும் உயிர்கள் ஊர்கள் தோறும் கரந்து இருந்து அவைகளை

தொழிலப்படுத்தி அறிவை விளக்கி நிற்பது சிவபரம் பொருளே என்றும் சிவபரம் பொருள் உருவ நிலையில் பராசக்தியின் அருள் கணத்திலிருந்து பிரியாது இருப்பினும் இடபாரூடர் முதலிய மூர்த்திகளை சக்தியை விட்டு பிரிந்து இருத்தல் அறிய கிடைப்பதாலும் சிவனையும் சக்தியையும் நாயக-நாயகி பாவமாய் நோக்குமிடத்து சிவனாருக்கு தலைமை கூறப்படுவதால் பெண் பாரசக்தியாகிய உமையை விடுத்து சிவனை வழிபட எண்ணி அவ்வாறே செய்தார். இதை பார்வதி அறிந்து சிவனிடம் கேட்க, தேவர்கள் எல்லோரும் தன்னை வணங்கி செல்ல பிருங்கி முனிவர் மட்டும் தங்களை மட்டும் வணங்கி செல்வது காரணம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டார். அதற்கு சிவனும் சக்தியும் சிவமும் ஒன்றே என்பதை அறியாது, வேற்றுமை பாராட்டி வணங்குகிறார் பிருங்கி முனிவர் என்றார். இவ்வுரை கேட்ட அன்னை நாம் இருவரும் இடைவெளி பேராது ஒன்று இருத்தல் வேண்டும் என்று சொல்ல அவ்வாறே வைத்திருந்தார்கள். இதை கண்ட பிருங்கி முனிவர் உள்ளம் தடுமாறிய நிலையில் வண்டு உருவம் கொண்டு கழுத்தில் கண்ட கறையாணி மட்டும் வலம் வந்து வணங்கிச் சென்றார். இதைக்கண்ட பார்வதிதேவி தன்னை அவமதித்ததைக் கண்டு உன் உடலில் உள்ள தசை முதலான எமது கூறுகள் செயல் இழந்து விடுவதாக என்று கடிந்து கூறினார். அக்கணமே செயல் இழந்து விடவே முனிவர் வலுவிழந்து கீழே சாய சிவனார் முன்பிருந்த இருகாலுடன் மூன்றாவது கால் ஒன்றையும் கொடுத்து அருளினார். இதனால் நான்மறைகளும் மெய்ப் பொருளை நன்கு அறிந்த நெருங்கியே எமது சக்தியின் நிலையை அறியாது நின்றாய் சிவனின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை சிவனை ஒழித்த சக்தி அதுவாக செயல்பட முடியாது, சக்தி இல்லையேல் இவற்றிற்கு இயக்கமே இல்லை, சிவமும் சக்தியும் உடன்படாத நிலையில் இப்பிரபஞ்சம் இயங்காது, அனைத்திற்கும் அடிப்படை சிவனும் சக்தியும், இதைக்கேட்ட பிருங்கி முனிவர் உண்மையை அறியாது கெட்டேன் என்று தன் தவற்றை திருத்தி அம்மையப்பரை வணங்கினார். இதை பார்த்த தேவர்கள் முதலானவர்கள் அறிந்து யாவரும் பார்த்து வணங்கினர். இதனால் இத்திருதல இறைவன் மூன்று காலுடன் காட்சி அளிக்கிறார்.

- முதுகயிடபரைக் கொன்ற பழியையும் இரணியன் இரண்யாட்சன் ஆகியோர்களை கொன்ற பழியும் போக்கிக் கொள்ளும் பொருட்டு திருமால்; திருச்செங்கோடு வந்து அம்மை அப்பரை வழிபட்டு பழிகளையெல்லாம் நீக்கி நலம் பெற்று சென்ற பெருமையும் உள்ளது.
- பரஞ்சோதியின் முடியை கண்டதாக பிரம்மன் பொய் கூறியதால் அவர் தலையில் ஒன்றைக் கொய்து அவருக்கு உலகில் கோயில் இல்லாமல் போகட்டும் என்று பரஞ்சோதி கட்டளையிட்டதால் அஞ்சிய பிரம்மன் திருச்செங்கோடு வந்து அம்மையப்பரை வழிபட்டு மனக்குறையை போக்கிக் கொண்ட மாண்பையும் இத்திருத்தலத்தில் வாயிலாக அறியலாம்.
- கொற்றவையும் ஆதிசேடனின் உபமன்யு முனிவர் முதலியோர் வழிபட்டு பெரும்பேறு பெய்த அருமையும் உடையது திருத்தலமாகும்.

## தலபுராணத்தில் உள்ள தொன்மக்கதைகள்

- கிருட்டிணன் உருக்குமணி திருமணம்
- திருச்செங்கோட்டுவேலவன் தெய்வயானை திருமணம்
- முருகன் வள்ளி திருமணம்
- முருகன் போருக்குப் புறப்படல்
- சூரபத்மன் தோற்றம்
- சிவன்பார்வதி திருமணம்
- சிங்கவர்மன் புலியாதல்

என்பன போன்றவை தொன்மக்கதைகளாக தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளன.

## பிரணவ உபதேசம்

திருச்செங்கோட்டு தலபுராணத்தில் முருகன் தன் தந்தை சிவனுக்கு ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உபதேசித்ததாக கூறப்பட்டுள்ளது. சிவபுராணங்கள் இறைவன் ஓங்கார ரூபியாக நின்றேன் இவ்வுலகத்தை படைத்தான் என்று கூறுவதோடு ஓங்கார ஜெபமே சிவ வெற்றிக்கு துணை செய்வது எனவும் கூறும். இதனை,

**உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா**

என்று மாணிக்கவாசகர் சிவபுராணத்திலும்

**ஓங்காரத்து பொருளாய் நின்றான் கண்டாய்**

என அப்பரும்

**உலகெல்லாம் ஓங்காரத்து உருவாகி நின்றானை**

என்ற சுந்தரரும் கூறி இருப்பதனால் உணரலாம். சித்தாந்த நூல்களும் ஓங்காரத்தை சூசகமாக விளக்கியுள்ளன. சிவனை உடுக்கையின் ஆணவத்தோடு பொருத்தி காட்டியுள்ளார். சிவன் உடுக்கையை தூக்கிய வலது கரத்தில் பிடித்து ஒலியை எழுப்புகிறார.; இது சிவபெருமானின் படைப்புத் தொழிலையும் பிறப்பின் ஒளியையும் குறிக்கின்றது. பிரணவ மந்திரம் சிவன் ஒலிக்கும் உடுக்கையிலிருந்து தோன்றியது என்பதை உணரலாம்.

ஓங்காரம் சிவத்தின் தத்துவ பொருளாக கூறப்பட்டாலும் திருச்செங்கோட்டில் முருகன் தன் தந்தை சிவனுக்கு உபதேசித்ததாக கூறப்படுகிறது. திருச்செங்கோடு மலையில் மீது ஏறும் பொழுது அறுபதாம் படிக்கட்டில் மேல் படியில் முருகன் குருநிலையிலும் சிவன் மாணவன் நிலையிலும் அமர்ந்து உபதேசம் பெறுவதாக சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரணவ மந்திரத்தை முருகன் சிவனுக்கு உபதேசித்ததாக கூறப்படுகிறது. இவ்வாறாக தந்தையை என்றாலும் அறிவாற்றல் உள்ள மகனின் அறிவுரையை கேட்க வேண்டும் என்ற வாழ்வியல் தத்துவத்தை உணர்த்துகின்றது.

## தலமரம் இலுப்பை

ஆலயத்தின் சக்தி நிலைகள் மூலவர். கொடி மரங்களை அடுத்து முதன்மையானது தலமரமாகும். ஆகம விதிகளின்படி தலமரம் கொடிமரம் தாண்டியபின் திருக்கோயில் வளாகத்தில் தான் இருக்கவேண்டும். அதன்படி இத்திருக்கோயிலின் வடக்குப் பகுதியில் நடராஜர் திருக்கோயிலுக்கு இடையில் இத்திருத்தலம் அமைந்திருப்பது சிறப்பாகும். இம்மரத்தை வழிபட்டவர்கள் மக்கள்செல்வம், பொருட்செல்வம் ஆகியவற்றை பெறுவார்கள் என்று தலபுராணம் கூறுகின்றது.

### புண்ணிய தீர்த்தங்கள்

இத்திருத்தலபெருமைக்கு மூர்த்தி கீர்த்தி தீர்த்தமே காரணமாகும். இங்கு பல நன்மைகள் உடைய புண்ணிய தீர்த்தங்கள் அமைந்துள்ளன. தேவர்கள் முனிவர்கள் மன்னர்கள் மக்கள் என பலதரப்பட்டவர்களும் உண்டாக்கப்பட்ட பல நீர்நிலைகள் உள்ளன. பரந்தகன்ற உள்ள மலை பரப்பிலும் மலைச் சரிவின் காரணமாக இந்த நீர் சுனைகள் இருக்கின்றன. இத்தலத்தில் பல தீர்த்தங்கள் இருப்பினும் சிலவற்றை மட்டும் தலபுராணம் எடுத்துக்காட்டியுள்ளது. கணபதி தீர்த்தம், வி~;ணு தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், துர்க்கை தீர்த்தம், நாக தீர்த்தம், சிவ தீர்த்தம், குமார தீர்த்தம், பாவநாச தீர்த்தம், தன்மை தீர்த்தம், இந்திர தீர்த்தம், வைரவ தீர்த்தம், பாண தீர்த்தம், சண்முக தீர்த்தம், சிவ தீர்த்தம், என பல தீர்த்தங்கள் உள்ளன. சான்றாக கணபதி தீர்த்தத்தில் மூழ்கினால் துன்பமிக்க நோய்களும் பழவினைகளும் நீங்கும். இதனை,

**வல்வினை யேழ்பவ மாறாத்துயர்நோய் மாறுவமுட்கொண்டால்**
**தொல்வினை மாற்றுஞ் சுனைமூழ்கிற்பர சொர்க்கம் பெறலாகும்**

என்றுதலபுராணத்தில் 23 ல் கூறப்பட்டுள்ளது. நாககிரி மலையில் மேலே கூறப்பட்ட தீர்த்தங்கள் தவிர எண்ணற்ற தீர்த்தங்களும் சுனைகளும் உள்ளன. நாககிரி மலையில் மேலே கூறப்பட்ட தீர்த்தங்கள் தவிர எண்ணற்ற தீர்த்தங்களும் சுனைகளும் உள்ளன. இவற்றில் எல்லாம் மூழ்கி அர்த்தபாகரை வணங்குபவர்கள் உடல்நோயும் மனநோயும் போக்கி மகிழ்ச்சி அடைகிறார்கள்.

## திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் நான்கு காலபூசைகளாக காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் நடைபெற்று வருகின்றன.

சித்திரை - சித்ராபவுர்ணமி, வைகாசி ஸ்ரீ விசாகப்;பெருந்திருவிழா, ஆனி - நடராஜர் திருமஞ்சனம், ஆவணி - விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி - மலைக்கோயில் கேதார கௌரி விரதம் மற்றும் நவராத்திரி, ஐப்பசி - கைலாசநாதர் கோயிலில் சூரசம்ஹாரம், கார்த்திகை - கார்த்திகை தீபத்திருவிழா, மார்கழி - ஆருத்ராதரிசனம், தை - படி திருவிழா, மாசி - சிவராத்திரி மாசிமகம்விழா, பங்குனி

- உத்திரத்திருவிழா என்று ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடத்துகொண்டேயுள்ளன.

பண்டைத் தொன்மையும் புராணப்பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்த்த பாடல் பெற்ற 274 சிவதலங்களுள் ஒன்றாகவும் கொங்குநாட்டில் உள்ள ஏழு சிவதலங்களுள் ஒன்றாகவும் திகழ்கி;ன்றது. சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் என இத்தலம் சிலம்பில் பேசப்படுகிறது. மன்னர்களாலும் சான்றோர்களாலும் பற்பலவான திருப்பணிகள் செய்யப்பெற்ற இத்திருக்கோயில் இராண்டாயிரம் ஆண்டு பழைமையான திருத்தலமாகும். உலகில் எங்கணும் காணஇயலாத மாதொருபங்கன் திருவுருவ அமைப்பைக் கொண்டு விளங்குவது சிறப்புக்குரியதாகும்.

இங்கு வழிபாடு செய்தவர்கள் இந்த பூமியில் கல்வி ஞானம் விஞ்ஞானம் இவற்றோடு அனைத்து செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என்று தலபுராணம் கூறுகின்றது.